வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 06.05.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 127 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஈழத் தமிழ் மக்களின் அரசியல் செல்திசையை தீர்மானிக்கும் நாள் இன்று

யாழ்ப்பாணம், மே 06

**தமிழ் மக்கள் தமது அரசியல் செல்திசை எது என்பதை வெளிப்படுத்தும் தீர்மானம்மிக்க தேர்தலை இன்றைய தினம் சந்திக்கின்றனர். இலங்கையின் சுதந்திர காலம் தொட்டு, தமிழ் மக்கள் தமது அரசியல் வேணவா நோக்கிய போராட்டத்தில் பல்வேறு திருப்புமுனைகளை சந்தித்தனர். அவ்வாறான திருப்புமுனையான தேர்தலாக இன்றைய தினம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தல் அமையவுள்ளது.**

தமிழ் மக்கள் தங்களின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கொள்கை கொண்ட கட்சிகளுக்கு பெருவாரியான ஆதரவை வழங்காது தேசிய கட்சி ஒன்றுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இதனால், தமிழ் மக்களின் நீண்ட - நெடிய உரிமைப் போராட்டம் தொடர்பில் பல சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்தன. இவ்வாறான நிலையிலேயே இன்றைய தினம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருப்புமுனையானதாக மாறியுள்ளது.

தமது தலைவிதியை மாற்றியமைக்கவல்ல - தமிழர் பெருங்கனவின் அரசியல் வேணாவாவை வெளிப்படுத்தவல்ல - தங்கள் பிரதேசத்தின் ஆளுகையை தீர்மானிக்கும் இன்றைய தேர்தலில் வெற்றியை தமிழ்த் தேசிய கொள்கை வழி கட்சிகளிடமா அல்லது தேசிய கட்சிகளிடமா கையளிப்பது என்ற கேள்விக்கான தீர்ப்பை தமிழ் மக்கள் இன்று வழங்குவர். இதனால், இன்றைய உள்ளூராட்சி சபைகள் தேர்தல் தமிழ் மக்களின் அரசியல் செல்நெறி எதுவென்பதை தீர்மானிப்பதாக அமையும் எனலாம்.

இதனிடையே, 7 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெறும் உள்ளூராட்சி

11



இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் காட்சி...! (படம் - ஐ. சிவசாந்தன்)

## 8,257 பேரை தெரிவதற்கு 75,589 பேர் போட்டியில்!

கொழும்பு, மே 06

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் என மொத்தம் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெறுகிறது. இதில், 8 ஆயிரத்து 257 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 75 ஆயிரத்து 589 பேர் போட்டியிடுகின்றனர்.

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. இன்று காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்கள் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்கு

11

## அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே 06

"வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளவர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். ஆணைக்குழு தனக்கான பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. இனி உங்களின் பொறுப்பை நிறைவேற்றுங்கள்", இவ்வாறு கேட்டுள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க.

நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அரச மற்றும் தனியார் துறை சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு இயலுமான

11

## தமிழ் மக்கள் இன்று தங்களை ஒரு தேசமாக நிரூபிக்க வேண்டும்!

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 06

அதிகாரத்தின் ஆரம்பப் புள்ளியாகிய உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகவும் தேசிய இனமாகவும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதை முன்னிட்டு, மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாற,

இலங்கை சுதந்திரம் அடைந்து 77 ஆண்டுகளாக தொடர்ச்சியாக மாறி மாறி வரும் சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கங்களால் தமிழ் மக்கள் தொடர்ந்தும்

11

## காணி சுவீகரிப்பு வர்த்தமானி அமுலானால் அரசு ஸ்தம்பிக்கும்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 06

"வடக்கு மாகாணத்தில் 4 மாவட்டங்களுக்கான காணி சுவீகரிப்பு தொடர்பாக கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப் படுத்தப்படுமானால் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வோம்", என்று எச்சரித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "முள்ளிவாய்க்கால் போர் காலத்தில் ஆவணங்களை இழந்த மக்களின் துயர் அறிந்து வர்த்தமானியை மீளப்பெற வேண்டும்", என்றும் கோரியுள்ளார்.

கொக்குவிலிலுள்ள கட்சி தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி விசேடமாக காணிகளை குறிவைத்து அரச காணி அல்லாத தனியார் காணிகள் அனைத்தையும் அடையாளம் காணுகின்ற நோக்கில் அரசாங்கம் கட்டவிழ்த்துள்ளது.

11

## அனர்த்தங்களால் யாழ்ப்பாணத்தில் 26 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய மழை மற்றும் மின்னல் தாக்கங்களால் 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், மின்னல் தாக்கத்தால் உடுவில் பிரதேச

11

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 517 வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 06

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 517 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 17 உள்ளூராட்சி சபைகளுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 6 ஆயிரத்து 320 அரச உத்தியோகத்தர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், ஆயிரத்து 48 பொலிஸாரும் மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, 517 வாக்களிப்பு நிலையங்களுக்கும் நேற்றைய தினம் வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சட்டம், பொது ஒழுங்கை முறையாகக் கடைப்பிடியுங்கள்!

## தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தல்

கொழும்பு, மே. 06

சுதந்திரமானதும் நீதியானதுமான வகையில் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படும். வாக்களித்ததன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை முறையாக கடைபிடியுங்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

339 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. வாக்களிக்க தகுதி பெற்றுள்ளவர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். ஆணைக்குழு தனக்கான பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. இனி உங்களின் பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

சுதந்திரமானதும் நீதியானதுமான வகையில் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படும். உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக பயன்படுத்தப்படும். வாக்களித்ததன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

நாட்டின் சட்டம் மற்றும் பொதுஒழுங்கை நாட்டு மக்கள் அனைவரும் முறையாக கடைப்பிடிக்க வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் முழு வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆகவே, அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அரச மற்றும் தனியார் துறை சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு இயலுமான வகையில் விடுமுறை வழங்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம். ஒருசில தனியார் துறையினர் தமது சேவையாளர்கள் வாக்களிக்க செல்வதற்கு விடுமுறை வழங்கவில்லை என்று ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படுமாறு தனியார் துறை சேவை வழங்குநர்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (அ)

# பிரதமரின் தேர்தல் சட்ட மீறல் விசாரணை நடத்த கோரிக்கை

கொழும்பு, மே. 06

உள்ளூராட்சித் தேர்தலின் அமைதிக் காலத்தின் போது பிரச்சாரத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் கட்சி ஆதரவாளர்களுக்கு வழிகாட்டும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் அண்மைய அறிக்கையை பவ்ரல் அமைப்பு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் ஆதரவாளர்களிடம் நுட்பமான வழிகளில் பிரசாரத்தை மேற்கொள்ளலாம் என அமைதிக் காலம் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் மொரட்டுவ பகுதியில் இடம்பெற்ற அரசியல் பேரணியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியதை பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

"இன்னும் 04 மணி நேரத்தில் அமைதி காலம் ஆரம்பமாகிறது. ஆனால் நீங்கள் அமைதியாக இருக்கத் தேவையில்லை. தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளலாம். சில வார்த்தைகளை உரக்கச் சொல்லலாம்" என்று பிரதமர் கூறியிருந்தார்.

இந்நிலையில் அமைதி காலத்தில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சுட்டிக்காட்டிய பவ்ரல் அமைப்பு, பிரதமரின் அறிக்கை தேர்தல் சட்டத்தை மீறுவதாகவும், சட்டத்தை புறக்கணிப்பதாகவும் கருதுகிறது.

பிரதமரின் அவ்வாறான அறிக்கை நாட்டின் சிறந்த அரசியல் கலாசாரத்துக்கு அச்சுறுத்தல் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு இந்த அறிக்கை அச்சுறுத்தலாகக் கருதப்பட்டால், விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# மாத்தளன் நந்திகடல் களப்பிலிருந்து இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, மே. 06

மாத்தளன் நந்திகடல் களப்பில் இருந்து நேற்று திங்கட்கிழமை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையை வசிப்பிடமாகக் கொண்ட 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஆவார்.

இவர் மூன்று நாட்களாக காணாமல் போயுள்ள நிலையில் நேற்று நந்திக்கடல் களப்பிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் நேரடியாக சென்று சடலத்தைப் பார்வையிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து சென்று உடற்கூற்று பரிசாதனை செய்த பின்னர் உறவினர்களிடம் கையளிக்க உத்தரவிட்டார்.


இது தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# யாழில் இரத்ததான முகாம்!

யாழ்ப்பாணம், மே. 06

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று குறித்த அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இவ் இரத்ததான முகாமில், பயிலுநர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டு இரத்ததானத்தை மேற்கொண்டனர்.



# சிதிலமடைந்து காணப்படும் எம்.பிக்களின் பங்களாக்கள்!

கொழும்பு, மே. 06

மாதிவெலவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களாக்கள் சிதிலமடைந்துள்ளதால் எம்.பிக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

சில பங்களாக்களின் கூரைகள், ஜன்னல்கள் மற்றும் கதவுகள் சிதைந்து உடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பழைய வீடுகள் எம்.பிக்களின் பங்களாக்களாகப் பயன்படுத்தப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக எம்.பிக்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பாராளுமன்ற அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இவற்றில் போதுமான வசதிகள் இல்லை என்றும் அவர்கள் கூறினர். (அ)

# விசேட சுற்றிவளைப்பில் 119 பேர் கைது!

கொழும்பு, மே. 06

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருட்களுடன் 119 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 32 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 52 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 31 பேரும்,

ஹேஷ் போதைப்பொருளுடன் 03 பேரும், போதை மாத்திரைகளுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 31 கிராம் 545 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 96 கிராம் 676 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 120 கிராம் 980 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 200 போதை மாத்திரைகளும், 12 கிராம் 600 மில்லிகிராம் ஹேஷ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# மாணவி அம்ஷிகாவின் மரணம் சமூகம் பொறுப்பு கூறவேண்டும்

## ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை

கொழும்பு, மே. 06

உயிரை மாய்த்துக் கொண்ட மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்துக்கு சமூகமும் பொறுப்புக் கூறவேண்டும். கல்வி அமைச்சும் சம்பந்தப்பட்ட பாடசாலையும் இந்த சம்பவத்தில் நீதியான முறையில் செயல்பட்டிருந்தால் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருக்காது. எந்தவொரு மாணவருக்கும் அநீதி இடம்பெறக்கூடாது. அம்ஷிகாவின் மரணத்தில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற மாணவி ஒருவர் ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தால் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி உயிரை மாய்த்துக் கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் ஊடக சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதில் உயிரை மாய்த்த மாணிவியின் பெற்றோர், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் முகனேஷ்வரி டென்சில் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 29 ஆம் திகதி டில்ஷி அம்ஷிகா என்கின்ற மாணவி அடுக்குமாடி குடியிருப்பின் 7 ஆவது மாடியிலிருந்து கீழே குதித்து உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் ஒன்று. இன்னொன்று முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டான்.

இது போன்ற சம்பவங்கள் ஏன் நடக்கின்றன. சுகாதார அமைச்சினால் 40 பாடசாலைகளில் 3843 மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 9.1 வீதமான மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்கள். 4.4 வீதமானவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்துள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் நடக்கமால் இருப்பதற்கு கல்வி அமைச்சு, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டில்ஷி அம்ஷிகாவின் மரணம் பரிதாபமான ஒன்று. அம்ஷிகாவுக்கு நடந்த சம்பவம் தொடர்பில் பெற்றோர் நீதி கேட்டு செயல்பட்டார்கள். இறுதியில் மாணவியை பாடசாலையில் இருந்து விலக்கி மற்றுமொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் முறையான ஒரு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தான் பெற்றோரின் குற்றச்சாட்டு. கல்வி அமைச்சு இவ்வாறான சம்பவங்கள் நடக்கும் போது பெற்றோர் மற்றும் மாணவிக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மாணவியின் வாழ்க்கை இல்லாமல் போயுள்ளது. இப்போது பெற்றோருக்கு பிள்ளை இல்லாமல் போய் உள்ளது. இந்த விடயத்துக்கு சமூகமும் பொறுப்பு கூற வேண்டும். கல்வி அமைச்சு, பாடசாலை இந்த சம்பவத்தில் நீதியான முறையில் செயல்பட்டிருந்தால் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருக்காது. இந்த சம்பவத்தால் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மாணவியை வைத்தியரிடமும் பெற்றோர் அழைத்துச் சென்றுள்ளனர்.

நாட்டில், 43 இலட்சம் மாணவர்கள் உள்ளனர். எல்லோரும் எமக்கு முக்கியம். எந்தவொரு மாணவருக்கும் அநீதி இடம்பெறக் கூடாது. அம்ஷிகாவின் மரணத்தில் நீதியான விசாரணை வேண்டும் என பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.05.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளூராட்சி தேர்தல்

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யப் போவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் பெறப்போகும் வாக்குகள் அவர்களின் அரசியல் முக்கியத்துவத்துக்கு சான்றாக அமையும். பாராளுமன்றத் தேர்தலில் அரிய வெற்றியைப் பெற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் செல்வாக்கை நிறுத்துப் பார்ப்பதாக உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிச்சயமாக அமையும். ஒருவேளை முன்னைய செல்வாக்கோடு தேசிய மக்கள் சக்தி இருப்பதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிரூபிக்குமாயின், அவர்களின் திட்டங்களை துணிகரமாக விரைவுபடுத்தக்கூடும்.

ஒருவேளை எதிர்பார்த்த வெற்றி கிடைக்காது போனால் அவர்கள் சில விடயங்களில் பின்னடிக்கக்கூடும். ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் அவர்களுக்கு சாதகமான நிலைமையே காணப்படுகிறது. ஏனெனில், எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் தமிழ்ச் சூழலே முக்கியமாக உற்று நோக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

தமிழ் சூழலைப் பொறுத்தவரையில் தேசிய மக்கள் சக்தியை பிரதான எதிராளியாகக் காண்பிக்கும் வகையிலேயே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஓர் எதிரியை இனங்காட்டும்போது அது தங்களுக்குச் சாதகமாக வரக்கூடுமென்னும் அடிப்படையிலேயே தமிழ்க் கட்சிகளின் தேர்தல் தந்திரோபாயம் அமைந்திருந்தது. ஆனால், இதிலுள்ள ஆபத்து இவ்வாறான பிரசாரங்களுக்கு மத்தியிலும் தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றியைப் பெறுமானால், அது தமிழர் அரசியலை பெருமளவில் பாதிக்கும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்ட கட்சிகள் தற்போது பல அணிகளாக தேர்தலை எதிர்கொள்கின்றன. இதேபோன்று, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, சங்கு சின்னத்தில் ஒன்றுபட்டிருந்தவர்கள் சிலர் இப்போது வேறு அணிகளாகப் போட்டியிடுகின்றனர். இவ்வாறான சூழலில் தமிழ் கட்சிகளால் வடக்கு, கிழக்கிலுள்ள பெரும்பாலான சபைகளில் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலைமையே ஏற்படப் போகின்றன. ஆனால், கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது இல்லாத புதியதொரு சவால் இப்போது ஏற்பட்டிருக்கிறது அதுதான், தேசிய மக்கள் சக்தி. இப்போதும் தமிழ் கட்சிகளை நிராகரிக்க விரும்பும் ஒருவருக்கு முன்னாலுள்ள தெரிவு என்ன என்னும் கேள்வி சிக்கலானதாகவே இருக்கிறது.

மொத்தத்தில், ஈழத் தமிழர்களுக்கான அரசியல் எதிர்காலமானது ஓர் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. இது அடிப்படையில் மிகவும் மோசமான நிலைமை. தமிழ்க் கட்சிகள் தாங்களாகவே தேவையில்லாத வகையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு அதிக தமிழ்த் தேசிய முக்கியத்துவத்தை கொடுத்திருக்கின்றன. இதன் காரணமாக வடக்கு, கிழக்கில் தங்களின் செல்வாக்கை நிரூபிக்க வேண்டிய இக்கட்டான நிலைமை தமிழ் கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இனி, முடிவு தமிழ் மக்களின் தீர்மானகரமான வாக்களிப்பில்தான் தங்கியிருக்கிறது.

# ஊழலை ஒழிக்கும் விடயத்தில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது

### கூறுகிறார் சபாநாயகர்

கொழும்பு, மே. 06

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகவும், இன ரீதியான, மத ரீதியான பிரிவினைகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு உறுதியாக இருப்பதோடு, ஊழலை ஒழிக்கும் விடயத்தில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ், சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனை தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற இச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார்.

அண்மையில் கனடாவில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற கனேடியப் பிரதமருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த சபாநாயகர், கனேடிய மக்களுக்கும் தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் கனடாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஆறு தசாப்தத்திற்கு மேலாகக் காணப்படும் உறவுகளையும் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கனடா தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கும் சபாநாயகர் நன்றியைத் தெரிவித்தார்.

மகாவலி போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், கண்ணிவெடி அகற்றல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் இலங்கைக்கு கனடா வழங்கிய உதவிகளையும் சபாநாயகர் நினைவு கூர்ந்தார். பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமைகளின்போதும், கடன் மறுசீரமைப்பின் போதும் கனடா வழங்கிய உதவிகளுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

கனடா பாராளுமன்றத்தில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து வருவதை சபாநாயகர் பாராட்டியதுடன், இது கனடாவின் பன்முக கலாச்சார சமூகத்தின் பிரதி பலிப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்ணிவெடி அகற்றும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் அக்கறையுடன் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது எனச் சுட்டிக் காட்டிய கனேடிய தூதுவர், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், ஊழலை ஒழிப்பதற்கும் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

இரு நாடுகளினதும் பாராளுமன்றங்களுக் கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் தொடர்புகளை விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை பத்தாவது பாராளுமன்றத்தில் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சபாநாயகர் இதன் போது தெரிவித்தார். (அ)

## மகேஷ் கம்மன்பிலவுக்கு பிணை

கொழும்பு, மே. 06

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஊவா மாகாண சபையின் தலைமைச் செயலாளரும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவருமான மகேஷ் கம்மன்பிலவை பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகேஷ் கம்மன்பில நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விவசாயத்துறை அமைச்சின் மேலதிக செய லாளராக மகேஷ் கம்மன் பில கடமையாற்றிய காலத்தில் சீனாவிலிருந்து தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக இடை நிறுத்தப்பட்ட கடன் அறிக்கைகளை மீண்டும் செயற்படுத்த உத்தரவிட்ட குற்றச்சாட்டின் பேரில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது!

கொழும்பு, மே. 06

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாலியபுரம் பிரதேசத்தில் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் சாலியபுரம் பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 200 போதை மாத்திரைகள், கையடக்கத் தொலைபேசி மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்து சம்பாதித்த 69 ஆயிரம் ரூபா பணம் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முறப்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். உறவினர்களின் அன்பு தொல்லை குறையும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**

பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மிதுனம்**

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக் குழப்பம் நீங்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுபார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**கன்னி**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் விவாதம் வரும். முன்னேறும் நாள்.

**துலாம்**

பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**விருட்சிகம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**தனுசு**

கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணவரவு திருப்தி தரும். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**

சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**மீனம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் வீடுகளைகட்டும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் வவுனியா மாவட்டம் தயார்

வவுனியா, மே 06

இன்றைய தினம் உள்ளூராட்சி தேர்தல் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் வவுனியா மாவட்டத்தில் பூர்த்தியாகியுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் பீ. ஏ. சரத் சந்திர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் மாவட்ட செயலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வவுனியா மாவட்டத்தில் ஒரு மாநகர சபை உட்பட 4 உள்



ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 103 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 731 பேர் போட்டியிடுகின்றனர். ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மக்கள் வாக்களிக்க வசதியாக 154 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குப்பெட்டிகள் யாவும் நேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் கடமைகளில் ஆயிரத்து 605 உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுளனர். ஆயிரத்து 307 பொலிஸாருடன் மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ஐ)

## திருட்டுப்போன 35 பவுண் நகைகளை மீட்ட பொலிஸ்!

வவுனியா, மே 06

திருடப்பட்ட சுமார் 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 35 பவுண் நகைகளை வவுனியா - நெளுக்குளம் பொலிஸார் மீட் டுள்ளனர். அத்துடன், சந்தேகந பர் ஒருவரையும் கைது செய்துள் ளனர்.

வவுனியா - கணேசபுரத்தில் மூன்று தினங்களுக்கு முன்னர் வீடு ஒன்றில் 35 பவுண் நகைகள் திருட்டுப்போயின. இது குறித்து நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில், நெளுக்கு ளம் பொலிஸ் பொறுப்பதிகாரி டி. எம். ஏ. சமரகோன் தலைமையில் உப பொலிஸ் அதிகாரி எல். எஸ். வீரசிங்க, பொலிஸ் கொஸ்தாபிள்களான நிரோஜன் (8137), தீபன் (80998) அடங்கிய குழுவினரால் விசேட நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது.




இந்த நிலையில், நேற்றுமுன் தினம் மாலை கொக்குவெளி யில் 29 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரி டம் நடத்தப்பட்ட விசாரணைகளில் 35 பவுண் நகைகளும் மீட் கப்பட்டன.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## ஊர்காவற்றுறைக்கு வாக்குப் பெட்டிகள்!

யாழ்ப்பாணம், மே 06

ஊர்காவற்துறை வாக்களிப்பு நிலையங்களுக்கு முதலாம் கட்ட வாக்குப் பெட்டிகள் நேற்று பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் இரு பேருந்துகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



இன்றைய தினம் நடைபெறும் உள்ளூராட்சி சபைகள் தேர்தலையொட்டி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை அனுப்பும் பணிகள் நேற்று மேற்கொள்ளப் பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம. பிரதீபன், பிரதித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலன், தேர்தல் கடமைக்காக இணைக்கப்பட்ட சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பொ. தயானந்தன், மேலதிக அரசாங்க அதிபரும் (காணி) நலனோம்பல், உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான க. சிறீமோகனன் , மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களும் இணைந்து வாக்குப் பெட்டிகளை அனுப்பி வைத்தனர்.

## மன்னாரில் 114 வாக்களிப்பு நிலையங்கள்!

மன்னார், மே 06

உள்ளூராட்சி தேர்தலுக்காக மன்னார் மாவட்டத்தில் 114 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றைய தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன எடுத்துச் செல்லப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி சபைகளுக்கு 103 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர். 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்னர். 114 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன. (ஐ)


## நகுலேஸ்வரர் ஆலயத்தில் காண்டாமணி பிரதிஷ்டை!

யாழ்ப்பாணம், மே 06

வரலாற்று பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு லண்டனிலிருந்து கொண்டுவரப்பட்ட காண்டாமணி கடந்த சனிக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஆலயத்தின் நகுலேஸ்வர குருக்கள் 1989ஆம் ஆண்டு லண்டன் சென்றபோது ஆலயத்துக்கான காண்டாமணி செய்யும் திருப்பணியை ஆரம்பித்தார். எனினும், அது கைகூடவில்லை. இந்த நிலையில் கடந்த 2023ஆம் ஆண்டு அவர் காலமானார்.

இந்த நிலையில், 2024ஆம் ஆண்டு ஆலயத்துக்கான காண்



டாமணி செய்யும் திருப்பணி ஆரம்பமானது. 750 கிலோ எடையும் 43 அங்குலம் விட்டம், 34 அங்குலம் உயரமும் கொண்ட காண்டாமணி சுமார் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது.

இந்தக் காண்டாமணி லண்டனில் இருந்து கொண்டுவரப்பட்டு, கடந்த சனிக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி நகுலேஸ்வர குருக்களின் 100ஆவது பிறந்த தினமாகும். இதையொட்டி எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி மணிக் கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரமானியம் கிடைக்காதமையால் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை!

## விவசாயிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 06

**சிறுபோகத்துக்கான விளைச்சல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரமானியம் இதுவரையிலும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என விவசாயிகள் குற்றஞ் சுமத்துகின்றனர்.**

தற்போது சிறுபோக நெற்செய்கைக்காக பதினைந்தாயிரம் மெற்றிக் தொன் உரம் தேவைப்படுவதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

குறித்த உரத்தொகையானது ஒரு மாதத்துக்கு முன்பாகவே வழங்கப்பட்டிருக்க வேண்டுமென அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறு உரிய காலப்பகுதிக்குள் உரம் வழங்கப்படாமையால் எதிர்பார்த்தளவு விளைச்சலைப் பெற முடியாது எனவும் விவசாய அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

மானிய விலையில் உரம் வழங்கப்படாமையினால் அதிக விலைக்கு உரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# அதிகரிப்பை பதிவு செய்த கொழும்பு பங்குச் சந்தை

கொழும்பு, மே. 06

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 64.95 புள்ளிகளால் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 15,916.69 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 2 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. (அ)

# வியட்நாம் போர்வீரர் நினைவிடத்தில் ஜனாதிபதி அநுரகுமார மலர் அஞ்சலி







கொழும்பு, மே. 06

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முற்பகல் ஹனோயில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்துக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள ஹோ சி மின் நினைவிடத்தை பார்வையிட்ட ஜனாதிபதி,சுதந்திரப் போராட்டத் தலைவரும், சுதந்திர வியட்நாமின் முதல் ஜனாதிபதியுமான ஹோ சி மின்னின் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்து கொண்டார்.

# இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் மருத்துவரை அணுகுங்கள்!

கொழும்பு, மே. 06

நுளம்புகளால் பரவும் நோய்கள் மற்றும் வழக்கமான வைரஸ் காய்ச்சல் அதிகரித்து வருவதால், இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல் இருந்தால் மருத்துவரை அணுகுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆலோசகர் மருத்துவர் அச்சலா பாலசூரிய கூறியதாவது, சரியான மருத்துவ ஆலோசனை இல்லாமல் வீட்டிலேயே காய்ச்சலுக்கு சிகிச்சை அளிப்பது ஆபத்தானது.

சிலர் இது ஒரு எளிய வைரஸ் காய்ச்சல் என்று நினைக்கலாம், ஆனால், டெங்கு அல்லது சிக்குன்குனியா போன்ற கடுமையான நோய்கள் இதே போன்ற அறிகுறிகளுடன் தொடங்கலாம்.

இருப்பினும், ஆரம்பத்திலேயே பரிசோதனை செய்து கொள்வதும், நிலைமையை மோசமாக்கும் மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் முக்கியம்.

மருத்துவரை அணுகாமல் அஸ்பிரின் அல்லது புறூபென் போன்ற மருந்துச் சீட்டு வலி நிவாரணிகளை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் அவர் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

இந்த மருந்துகள் அனைத்து வகையான காய்ச்சலுக்கும் பாதுகாப்பானதாக இருக்காது.

உங்களுக்கு இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல், குறிப்பாக சோர்வு, தோல் வெடிப்புகள் அல்லது மூட்டு வலி இருந்தால், முறையான பரிசோதனைக்காக மருத்துவமனை அல்லது மருத்துவமனைக்குச் செல்வது நல்லது.

மேலும், இந்த நாட்களில் சிக்குன்குனியா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.முக்கிய அறிகுறிகளில் திடீர் அதிக காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை அடங்கும்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு வாரத்திற்குள் குணமடைந்தாலும், சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக வயதானவர்களிடையே, மூட்டு வலி மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும்.எனவே, காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவ ஆலோசனையைப் பெறுவதன் முக்கியத்துவத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார் சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.ஏ.கலு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார். (அ)

# சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்ல செலவுகள் ஐம்பது வீதத்தால் குறைப்பு

கொழும்பு, மே. 06

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உணவு மற்றும் பானங்கள் உள்ளிட்ட செலவுகள் சுமார் ஐம்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

கடந்த காலங்களில் உத்தியோகபூர்வ இல்லத்தில் உணவு மற்றும் பானங்களுக்காக மாதந்தோறும் மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டதாகவும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சபாநாயகர் அந்த இல்லத்தில் வசிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளதாகவும்,

வார இறுதி நாட்களில் மட்டுமே அந்த இடத்துக்குச் சென்று வெளிநாட்டுத் தூதர்களைச் சந்திக்கும்போது அந்த நடவடிக்கைகளில் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், சபாநாயகரின் அதிகாரப்பூர்வ இல்லத்தின் தோட்டத்தில் உள்ள மரங்கள், புதர்கள் மற்றும் புல்வெளிகளைப் பராமரிப்பதற்கு குழாய் நீரைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு சபாநாயகர் அறிவுறுத்தியுள்ளார்.

சபாநாயகரின் அதிகாரபூர்வ இல்லத்தைச் சுற்றி அமைந்துள்ள நீர்த்தேக்கத்திலிருந்து வரும் தண்ணீரை மட்டுமே இந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும்,

தண்ணீர் எடுக்க மோட்டாரை இயக்க சூரிய சக்தி பேனல்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ)

# இந்த ஆண்டில் மட்டும் 42 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, மே. 06

இலங்கையில் துப்பாக்கி வன்முறை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு இதுவரை நாடு முழுவதும் 42 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 25 தொடர்புடைய இறப்புகளும் பதிவாகியுள்ளன. இது பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து கடுமையான கவலைகளை எழுப்புகிறது.

குற்றச் சம்பவங்களின் அதிகரிப்பு மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்களை நடத்தி தப்பிச் செல்வது எவ்வளவு எளிது என்பது குறித்து, கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொலைகளில் பெரும்பாலானவை போட்டி பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையேயான போதைப்பொருள் போருடன் தொடர்புடையவை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

நேற்று கல்கிசை கடற்கரை வீதியில் அதிகாலையில் 19 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பாதிக்கப்பட்டவர் ஆயுதமேந்திய ஒருவரால் துரத்தப்பட்டு சுடப்படுவதை சி.சி.ரி.வி காட்சிகள் காட்டுகின்றன.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தனது எக்ஸ் பதிவில் விரக்தியை வெளிப்படுத்தினார்:

"இலங்கை பொலிஸ் என்ன செய்கிறது? இன்று காலை மீண்டும் மவுண்ட் சந்திப்பில் 19 வயது இளைஞன் ஒரு துப்பாக்கிதாரியால் துரத்தப்பட்டு ஓடுவதைக் காணலாம். பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த சில மாதங்களில் எத்தனை துப்பாக்கிச் சூடுகள் நடந்தன என்பது எனக்கு நினைவில் இல்லை. இலங்கையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் முற்றிலும் தோல்வியடைந்தது அரசு" என அவர் கூறியுள்ளார்.

சட்டம் மற்றும் ஒழுங்கில் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அரசாங்கமும் பொலிஸ்துறையும் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், வலுவான நடவடிக்கைக்கான அழைப்புகள் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை, நேற்று 19 வயது இளைஞன் கொலை செய்யப்பட்ட சம்பவம், அவரது தாயாருடன் தொடர்புடைய போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸ்துறையினரின் கூற்றுப்படி, போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக பாதிக்கப்பட்டவரின் தாய் மீது பல்வேறு நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருப்பதாக விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலை போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதா என்பதைக் கண்டறியவும், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைது செய்யவும் கல்கிசை பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்ட தங்க நகைகளை மதிப்பீட்டுக்கு அனுப்புக!

### கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே. 06

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட போர் நிறைவுக்கு வந்த காலப் பகுதியில் இலங்கை இராணுவத்தால் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டு பொலிஸ் மா அதிபரிடம் உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை உடனடியாக மதிப்பீட்டுக்கு அனுப்புமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நகைகளை தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைக்கு அனுப்பிச் சோதித்து அறிக்கைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறை சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பின்னர், கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி இந்த உத்தரவுகளை பிறப்பித்தார்.

குறித்த ஆபரணங்கள் கடந்த 02ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் தலைமையகத்தில் வைத்து பொலிஸ் மா அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இதன்போது பதில் பொலிஸ் மா அதிபரினால் பொறுப்பேற்கப்பட்ட குறித்த ஆபரணங்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரச பையினால் அதன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரே இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வியட்நாம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய அநுரகுமார!

### இரு தரப்பு ஒப்பந்தங்களும் முன்னெடுப்பு



கொழும்பு, மே. 06

**வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு, வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கினால் நேற்று அமோக வரவேற்பளிக்கப்பட்டது.**

நேற்று முற்பகல் வியட்நாம் ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, முப்படைகளின் மரியாதையுடன் வரவேற்கப்பட்டதுடன், முப்படைகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

வரவேற்பு நிகழ்வில், இரு தலைவர்களும் இலங்கை மற்றும் வியட்நாமின் தேசிய கீதங்களுக்கு மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து இரு நாடுகளின் பிரதிநிதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான முன்னேற்ற மீளாய்வு, எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இந்தப் பயணத்தின் மூலம் அரசியல் நம்பிக்கையை மேம்படுத்துவதோடு, இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நடைமுறை மற்றும் செயற்திறன்மிக்க ஒத்துழைப்பை மேலும் ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1970 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதிலிருந்து வியட்நாமும் இலங்கையும் வலுவான மற்றும் தொடர்ச்சியான உறவுகளைப் பேணி வருகின்றன.

இலங்கை மற்றும் வியட்நாமின் வருடாந்த இருதரப்பு வர்த்தகம், முக்கியமாக ஏற்றுமதிகள், சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை எட்டியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் இருதரப்பு வர்த்தகத்தை 01 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதை இரு தரப்பினரும் இலக்காகக் கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டு வியட்நாமும் இலங்கையும் இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில், பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை பயன்படுத்தி உறவுகளை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் தயாராக உள்ளன.

ஜனாதிபதி திஸாநாயக்கவின் விஜயம், வியட்நாமுடனான பாரம்பரிய நட்புறவுக்கான இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதோடு, டிஜிற்றல் பரிமாற்றம், டிஜிற்றல் பொருளாதாரம், வலுசக்தி மாற்றம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பாரம்பரிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும், புதிய ஈடுபாட்டு வழிகளைத் திறப்பதற்கும் பகிரப்பட்ட உறுதியை இது பிரதிபலிக்கிறது.

(அ)

## திறைசேரி உண்டியல் நாளை ஏல விற்பனை

கொழும்பு, மே. 06

130,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 20,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 60,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பகிடிவதைச் சம்பவம்

## சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே. 06

பகிடிவதை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் நால்வர் எதிர்வரும் மே 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பலங்கொடை, நீதிவான் நீதிமன்றில் நேற்று அவர்கள் முன்னிலைப்படுத் தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அண்மையில் சக மாணவர் ஒருவரின் மரணம் குறித்து நடந்து வரும் விசாரணைகள் தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சி.ஐ.டி) நேற்று முன் தினம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஏப்ரல் 29 அன்று, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர், ஒரு பகிடிவதைச் சம்பவத்தால் மன உளைச்சலுக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்பட்டது.

இறந்தவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த 23 வயதான சரித் தில்ஷான் என்ற இரண்டாம் ஆண்டு மாணவன் ஆவார்.

மே 1 ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் மற்றொரு மாணவர் சமனலவேவா பொலிஸ் நிலையத்தில், குறித்த மாணவன் பகிடிவதை காரணமாக தற்கொலை செய்து கொண்டதாகக் கூறி முறைப்பாடு அளித்தார்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை சமனலவேவா பொலிஸார் 20 பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர்.

இதற்கிடையில், சரித் தில்ஷான் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் பகிடிவதை சம்பவம் தொடர்பான விசாரணை, மே 3 ஆம் திபதி, பதில் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ)

## வாக்காளர் தவிர்க்கவேண்டியவை

கொழும்பு, மே. 06

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்களிப்பின் போது வாக்காளர்கள் தவிர்க்க வேண்டிய விடயங்கள் குறித்து தேசிய தேர்தல் ஆணையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையகத்தின் கூற்றுப்படி, தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுப்பதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்குச் சீட்டுகளின் புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்கவும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கைபேசிகளைப் பயன்படுத்துதல், துப்பாக்கிகளை வைத்திருத்தல், புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் அல்லது மது அருந்திவிட்டு வாக்குச் சாவடிக்குள் நுழைதல் ஆகியவை தவறான நடத்தையாகக் கருதப்படும் என்று தேர்தல் ஆணையகம் கூறுகிறது.

(அ)

## சாமர சம்பத் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மே. 06

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பதுளை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதான அவர் அன்றைய தினம் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது இரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக அவருக்கு பிணை வழங்கப்பட்டது. எனினும், மேலுமொரு குற்றச்சாட்டுக்காக அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில், குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பதுளை நீதவான் நுஜித் டி சில்வாவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலேயே அவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளையும் சில பாடசாலைகள் பூட்டு!

கொழும்பு, மே. 06

உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, சில அரசப் நாளை புதன்கிழமையும் மூடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் நாளை நடைபெறவிருப்பதை முன்னிட்டு, அனைத்து அரசுப் பாடசாலைகளும் நேற்று மற்றும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்குப் பின்னர் பெரும்பாலான பாடசாலைகள் நாளை மீண்டும் திறக்கப்படும் என்றும், சில பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நாளை மூடப்படும் பாடசாலைகளின் பட்டியலை அமைச்சு அறிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலீடு செய்யும் வியட்நாமின் வின்குருப் குழுமம்!

## ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு



கொழும்பு, மே. 06

**வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நேற்று முன் தினம் பிற்பகல் வியட்நாமில் உள்ள வின்குருப் குழுமத்தின் உயர் நிர்வாகத்தைச் சந்தித்து கலந்துரையாடினார்.**

வின்குருப் குழுமத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின், இலங்கையில் ஆதன வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடு செய்யுமாறு வின்குருப் குழுமத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

வின்குருப் நிறுவனத்தின் வெற்றி மற்றும் பல்வகைப்பட்ட உலகளாவிய வர்த்தக நாமங்களின் உருவாக்கத்துக்கும் வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் முதலீட்டுக்கு நெகிழ்வான மற்றும் உகந்த சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளது என்று வலியுறுத்தினார்.

இலங்கையின் மூலோபாய புவியியல் இருப்பிடம், முற்போக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் குறிப்பாக சுற்றுலாத்துறை, ஆதன வர்த்தகம் ஆகிய அதிக திறன் கொண்ட துறைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

டெக்னொகொம் கோர்ப்பரேஷன் என்று முன்னர் அழைக்கப்பட்ட வின்குருப் கூட்டு பங்கு நிறுவனம்,1993 இல் உக்ரைனில் நிறுவப்பட்டது. தற்போது, வின்குருப் பெயர் வியட்நாமில் மிகப் பாரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க தனியார் நிறுவனங்களில் ஒன்றாகும்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்,வின்குருப் குழுமத்தின் உப தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வியட் குவாங் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

# ஜனாதிபதிக்கு எதிராக அவதூறு சி.ஐ.டியிடம் முறைப்பாடு பதிவு

கொழும்பு, மே. 06

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக அவதூறான மற்றும் தவறான கருத்துக்கள் தொடர்பாக, தேசிய லொத்தர் சபையின் முன்னாள் செயற்பாட்டுப் பணிப்பாளரும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகமுமான துசித ஹல்லொலுவவுக்கு எதிராக நேற்று முன் தினம் இரவு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட மேற்படி கருத்துக்கள், ஜனாதிபதியின் நற்பெயருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால், துசித ஹல்லொலுவ மற்றும் அந்தக் கருத்துக்களை சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப நடவடிக்கை எடுத்த சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பில் துரித விசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக அவரின் சட்டத்தரணி அகலங்க உக்வத்தேவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவும் இதில் இணைந்து கொண்டார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, மே. 06

கல்கிஸை - கடற்கரை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 19 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.சம்பவத்தில் உயிரிந்த இளைஞன் தெஹிவளை - ஒர்பன் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 8 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, மே. 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணிநேரத்தில் 8 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் காலை 6 மணிமுதல் நேற்று காலை 6 மணி வரையான காலப்பகுதியிலேயே மேற்படி வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு, குறித்த காலப்பகுதியில் கட்சிகளின் ஆதரவாளர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மார்ச் 3 ஆம் திகதி முதல் நேற்று வரை கைது செய்யப்பட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 204 கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டனர். இதற்கிடையில், தேர்தல் சட்டங்களை மீறியதற்காக பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 46 ஆகும். (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு 3 மாதங்களில் 1,267 முறைப்பாடுகள்

கொழும்பு, மே. 06

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 1,250 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை 1,267 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட 24 சோதனை நடவடிக்கைகளில் சந்தேகநபர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 6 பேர் பொலிஸ் அதிகாரிகள் என்றும், அவர்களில் ஒரு அதிபர், தொழில் அமைச்சின் அதிகாரி, ஒரு கள அதிகாரி மற்றும் ஒரு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஆகியோரும் உள்ளடங்குவதாக தெரியவருகிறது.

இதற்கு மேலதிகமாக பொது சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், நீதி அமைச்சில் பணியாற்றும் ஊழியர், இறைவரித் திணைக்கள மதிப்பீட்டு அதிகாரி ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மாத்திரம் 24 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் 21 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக் குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வெளியுறவுக் கொள்கையினால் நாட்டில் பாரிய நெருக்கடிநிலை

கொழும்பு, மே. 06

அரசாங்கம் கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கை தேசிய ரீதியில் பாரிய பிரச்னையை தோற்றுவித்துள்ளதாக, தேசபக்தி தேசிய இயக்கத்தின் தலைவர் சேனாதிபதியே ஆனந்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அரசாங்கம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் ஏழு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது. பிரதமர் மோடி இலங்கைக்கு வந்து இந்தியாவுக்குச் சென்ற பின்னரே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதாக அரச தரப்பில் கூறப்பட்டது.

எனினும் அவை எவ்வாறான ஒப்பந்தங்கள் என்பது குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் என்னவென நாம் கேட்கிறோம். நாட்டை பலி கொடுப்பதற்கான ஆணையை மக்கள் எந்தவொரு அரசாங்கத்துக்கும் வழங்கவில்லை.

ஆதலால் இந்த விடயம் தொடர்பில் நாம் கலந்தாலோசித்து மக்கள் மத்தியில் இதன் ஆபத்து குறித்து விளக்கமளிக்க தீர்மானித்துள்ளோம்.மேலும், நாட்டில் அடிப்படைவாத கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

நாட்டில் யுத்தம் இடம்பெற்றபோது இஸ்ரேல் எமக்கு உதவியது. ஆயினும் அந்நாட்டுக்கு எதிரான கருத்துகள் சிலரால் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலை நெருக்கடியை மேலும் அதிகரிக்கும்-என்றார். (அ)

# மேர்வின் சில்வாவுக்கு மீண்டும் விளக்கமறியல்!

கொழும்பு, மே. 06

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசு நிலங்களை அபகரித்த குற்றச்சாட்டில் கைதான முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் மூவர் மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மஹர நீதிவான் நீதிமன்றம் நேற்று நான்கு சந்தேக நபர்களையும் மே 19 வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மார்ச் மாதம் கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்தபோது குற்றப் புலனாய்வுத் துறை (சி.ஐ.டி) அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கிரிபத்கொடையில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலம் தொடர்பான நிதி மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# சுங்கச் சட்டங்களை மீறியவர்களின் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும்!

கொழும்பு, மே. 06

சுங்கச் சட்டங்களை மீறியதாகக் கண்டறியப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்களை பகிரங்கப்படுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை சுங்கத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பெயர்கள் வெளியிடப்படும்.

வேண்டுமென்றே வரி ஏய்ப்பைத் தடுப்பது, அரசாங்க வருவாயை துல்லியமாக சேகரிப்பதை உறுதி செய்வது மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விதிமுறைகளை இன்னும் கண்டிப்பாக அமல்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சுங்கத்துறை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்க ஊடகப் பேச்சாளரும் கூடுதல் சுங்க பணிப்பாளருமான சீவலி அருகொடவின் கூற்றுப்படி, இந்த நடவடிக்கை மோசடி நடைமுறைகளைத் தடுப்பதற்கும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே தன்னார்வ இணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் நோக்கமாக உள்ளது.


இது நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் சட்டவிரோதமாக பொருட்கள் கொண்டு செல்வதைக் குறைக்க உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய முயற்சி ஜூன் 2025 முதல் அமலுக்கு வருகிறது.

மேலும் பொதுமக்கள் றறற. உரளவழஅள.பழஎ.டம என்ற அதிகாரப்பூர்வ சுங்க வலைத்தளம் மூலம் குற்றவாளிகளின் பட்டியலை அணுகலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் இன்று; கிழக்கு மாகாணம் தயார்நிலை!



மட்டக்களப்பு, மே 06

**உள்ளூராட்சி சபைகள் தேர்தல் இன்று நாடுமுழுவதும் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கு கிழக்கு மாகாணம் முழு அளவில் தயாராகியுள்ளது.**

இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மக்கள் தமது வாக்குகளை செலுத்த முடியும்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 4 இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 6 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

பிரதான தேர்தல் நிலையமாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி உள்ளது. அங்கிருந்து 477 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. 144 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் விதிமீறல் சம்பவங்கள் 353 பதிவாகியுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஜே. ஜே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

**அம்பாறை**


அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 19 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 4 இலட்சத்து 78 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 458 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 202 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 385 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

**திருகோணமலை**

இந்தத் தேர்தலில் மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 3 இலட்சத்து 19 ஆயிரத்து 399 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மாவட்ட தேர்தல் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரி உள்ளது. அங்கிருந்து 321 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

தேர்தல் கடமைகளில் 3 ஆயிரத்து 820 அரச உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆயிரத்து 700 பொலிஸாருடன் இராணுவத்தினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



# மருத்துவமனையில் நேற்று திடீர் தீ விபத்து

மட்டக்களப்பு, மே 06

வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் நேற்று காலை 7 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வாழைச்சேனை ஆதார மருத்துவமனையின் எக்ஸ்ரே பிரிவிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. மின் ஒழுக்கால் இந்தத் தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது.

இந்தத் தீயால் எக்ஸ்ரே இயந்திர அறையின் உப இயந்திரங்கள், கணினி தொகுதி, குளிரூட்டி என்பவை எரிந்து நாசமாகின.

மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு விரைந்து செயல்பட்டு தீயை கட்டுக்குள் கொண்டுவந்தது. (ஐ)

# கசிப்புடன் வாகரையில் சந்தேகநபர் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, மே 06

வாகரை பொலிஸ் பிரிவின் கதிரவெளி பகுதியில் 20 லீற்றர் கசிப்பு மற்றும் 50 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அதே இடத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

கைதானவரிடம் வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இராட்சத யானை திருக்கை மட்டக்களப்பில் சிக்கியது!



மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பு முகத்துவாரம் ஆழ் கடலில் இராட்சத யானைத்திருக்கை மீன் பிடிபட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிக்கிய இந்த யானை திருக்கை மீன் சுமார் 300 கிலோ எடைக்கும் அதிகம் என்றும் இதன் பெறுமதி 3 இலட்சம் ரூபாய் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

பிடிபட்ட யானை திருக்கை மீனை கரைக்கு இழுத்துவருவதற்கு மீனவர்கள் பெரும் சிரமப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சித்த ஆயுள்வேத நிலையம் திருக்கோவிலில் திறப்பு!


திருக்கோவில், மே 06

திருக்கோவில் - தம்பட்டை பகுதியில் முற்று முழுதான இயற்கை வளங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள நிம்பா சித்த ஆயுள்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தம்பட்டை தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா ஜி மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஒன்றிணைந்த வைத்திய நிலையத்தை கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார்.

இவ்வைத்திய நிலையத்தில் இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பிரபல்யம் பெற்று காணப்படும் இயற்கை வைத்திய முறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக சித்த ஆயுர்வேத



வைத்தியம் யுனானி போன்ற வைத்திய சிகிச்சைகள் இங்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# களஞ்சியசாலையை உடைத்து பல வெடிபொருட்கள் திருட்டு!

அம்பாறை, மே 06

வெடி மருந்து களஞ்சியசாலையை உடைத்து அங்கிருந்து வெடிமருந்து உள்ளிட்ட வெடிபொருட்கள் திருடப்பட்டுள்ளன என்று அம்பாறை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அம்பாறை - தமன - அலஹேன கிராமத்தில் அமைந்துள்ள வெடிமருந்து களஞ்சியசாலையிலேயே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

முதல்கட்ட தகவல்களின் படி, 45 கிலோ கிராம் ஜெல் குச்சிகள், 10 மீற்றர் சேர்வீஸ் நூல், 4,100 டெட்டனேட்டர்கள் உள்ளிட்டவை திருடப்பட்டுள்ளன.

தனியார் கல்குவாரி உரிமையாளர்களின் வெடிமருந்து களஞ்சியாலையு இவ்வாறு உடைக்கப்பட்டது. இந்த வெடிமருந்து களஞ்சியசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது

நிந்தவூர், மே 06

ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

நிந்தவூர் - அட்டப்பள்ளம் பகுதியில் சனிக்கிழமை இரவு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவரிடமிருந்து ஒரு கிராம் 160 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

சாகாமம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர், நிந்தவூர் 23ஐ சேர்ந்த 32 வயது நபராவார்.

சந்தேகநபர் சட்ட நடவடிக்கைகளுக்காக நிந்தவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீதான தாக்குதலை விரிவாக்குகிறது இஸ்ரேல்!

## பல ஆயிரம் படையினரை அழைக்கிறது

டெல் அவிவ், மே 06

**காஸாவில் போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் விரிவுபடுத்தவும் பல ஆயிரக்கணக்கான மேலதிக இராணுவத்தினரை இஸ்ரேல் இராணுவம் அழைக்கத் தொடங்கியுள்ளது.**

ஹமாஸ் போராளிகளை தோற்கடிக்கவும் பணயக் கைதிகளை திருப்பி அனுப்புவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விரிவாக்கத்துக்கு நேற்றுமுன்தினம் கூடிய பாதுகாப்பு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என்று கூறப்படுகிறது. எனினும், இது குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

ஹமாஸ் போராளிகள் வசமுள்ள 59 பணயக் கைதிகளை விடுவிக்கவும் போர் நிறுத்தம் செய்யவும் புதிய ஒப்பந்தத்தை எட்டும் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன. எனினும், பணயக் கைதிகளில் 24 பேர் உயிருடன் இருக்கின்றனர் என்று நம்பப்படுகிறது.

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் சுமார் இரு மாதங்கள் நடைமுறையிலிருந்த நிலையில், கடந்த மார்ச் 18ஆம் திகதி முதல் இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியது. அதன் பிறகு எந்த பணயக் கைதிகளும் விடுவிக்கப்படவில்லை.

காஸாவின் நிலப்பரப்பில் பெரும் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். உணவு, தண்ணீர் மற்றும் மருந்துகள் இல்லாததால் பலர் இறக்கின்றனர். இது போர் குற்றம் என்று உதவி வழங்கும் நிறுவனங்கள் சாடுகின்றன. எனினும், இந்தக் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது.

இதேவேளை, காஸா மீதான போருக்கு இஸ்ரேலில் எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன. கடந்த சனிக்கிழமை போரை நிறுத்த வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் நடைபெற்றன.

இதனிடையே, நேற்றுமுன்தினம் இஸ்ரேல் காஸாமீது நடத்திய தாக்குதல்களில் 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 125 பேர் வரை காயமடைந்தனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த, 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் தாக்குதலை நடத்தினர். இதில், ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து ஹமாஸை அழிக்கும் நோக்கில் இஸ்ரேல் இராணுவம் காஸா மீது படையெடுப்பை செய்தது. 19 மாதங்கள் தொடரும் இந்தப் போரில் குறைந்தது 52 ஆயிரத்து 535 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)



# இஸ்ரேல் விமான நிலையம்மீது ஹௌதி போராளிகள் தாக்குதல்

டெல் அவிவ், மே 06

இஸ்ரேல் விமான நிலையத்தை குறிவைத்து ஹௌதி போராளிகள் ஏவுகணை தாக்குதலை நடத்தினர்.

தாக்குதல் நடத்தப்பட்டதை இஸ்ரேல் தரப்பும் உறுதி செய்துள்ளது. இந்தத் தாக்குதலில் 4 பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் சர்வதேச விமான நிலையமான பென் குரியன்மீது நடந்த தாக்குதலுக்கு ஏமனில் உள்ள ஹௌதி பொறுப்பேற்றுள்ளனர். காஸாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இஸ்ரேல் மீது ஹௌதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால், மத்திய இஸ்ரேலில் உள்ள விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. சில விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டன. விமான நிலையத்தின் அனைத்து வாயில்களும் சிறிது நேரத்துக்கு மூடப்பட்டிருந்தன.

ஹௌதி செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரீ அளித்துள்ள தொலைக்காட்சி பேட்டி ஒன்றில், "பென் குரியன் விமான நிலையம் இனி விமான போக்குவரத்துக்கு பாதுகாப்பானது இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)




# சிங்கப்பூர் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி!

சிங்கப்பூர், மே 06

சிங்கப்பூர் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் மக்கள் செயல் கட்சியே கைப்பற்றியுள்ளது. சுதந்திரமடைந்த காலம் முதல் மக்கள் செயல் கட்சியே அந்த நாட்டின் ஆட்சியில் இருந்து வருகிறது.

93 ஆசனங்களை கொண்ட பாராளுமன்றத்தில் 83 ஆசனங்களை அந்தக் கட்சி கைப்பற்றியுள்ளது. எனினும், முன்பைவிட எதிர்க்கட்சி கூடுதல் ஆசனங்களை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த தேர்தலில் 6 உறுப்பினர்களை கொண்டிருந்த எதிர்க்கட்சி இம்முறை 10 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஆளும் கட்சியின் வாக்குசதவீதமும் 61ஆக சரிந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்காக கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி சிங்கப்பூர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை தேர்தல் நடைபெற்றது. 83 ஆசனங்களை வென்ற மக்கள் கட்சி மீண்டும் ஆட்சியை தக்க வைத்தது. இதன் மூலம் லோரன்ஸ் வாங் மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.


(ஐ)

# போர் தந்த ஆறாவடு...!



போரில் ஏற்பட்ட காயங்களிலிருந்து மீண்டுவரும் காஸா சிறுவன் (மஹ்மூத் அஜ்ஜோரைக் - வயது 9). நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழுக்காக பலஸ்தீன படப்பிடிப் பாளர் சமர் அபூ எலூவ் கடந்த 2024 மார்ச்சில் எடுத்த இந்த இந்தப் படம் 2025இன் உலக பத்திரிகை ஒளிப்ப டமாக தெரிவாகியுள்ளது.

# புத்தரின் எச்சத்துடன் மீட்ட இரத்தினங்கள் ஏலத்துக்கு!



லண்டன், மே 06

நவீன யுகத்தின் மிகவும் வியப்பை ஏற்படுத்தும் தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் புத்தர் பெருமானின் எச்சங்களுடன் கண்டறியப்பட்ட 1800 இரத்தினக்கற்கள் இன்றைய தினம் ஏலத்தில் விடப்படவுள்ளன.

ஹொங்கொங்கில் இந்த ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

1898ஆம் ஆண்டு வட இந்தியாவில் இந்த நினைவுச் சின்னங்கள் கண்டறியப்பட்டன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரித்தானியாவின் தனியார் அரும்பொருள் சேகரிப்பாக இது இருந்தது.

தற்போது, இந்த இரத்தினக்கற்கள் ஏலமிடப்படவுள்ளன. 1,800 இரத்தினக்கற்களில் முத்துகள், மாணிக்கங்கள், புஷ்பராகங்கள், நீலக்கற்கள் மற்றும் வடிவமைக்கப்பட்ட தங்கத் தாள்கள் என்பன உள்ளடங்குகின்றன.

வட இந்தியாவின் தற்போதைய உத்தரப் பிரதேசத்தில் புத்தர் பெருமான் அவதரித்தார் என்று நம்பப்படும் இடத்துக்கு அருகே செங்கற்களால் கட்டப்பட்ட அறை ஒன்றின் நிலத்தின் கீழ் இந்தப் பொருட்கள் கண்டறியப்பட்டன.

இந்த கண்டுபிடிப்புக்களுடன் புத்தரின் எலும்பு எச்சங்களும் காணப்பட்டன என்று கூறப்படுகிறது. இவை இருந்த கலசத்தில் "புத்தபிரானுக்குச் சொந்தமானது" எனப் பொறிக்கப் பட்டி ருந்ததாகக் கூறப்படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட இவை சர்வதேச ரீதியாக தொல்பொருள் ஆராய்ச்சியாளரை வியக்க வைத்துள்ளது. "எந்தக் காலத்திலும் மிகவும் அசாதாரண தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் இது ஒன்று" என சோத்பி ஆசியாவின் தலைவரும், ஆசியத் தொல்பொருள் அமைப்பின் உலகளாவிய தலைவருமான நிக்கோலஸ் சோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புனிதமான கடந்த காலத்துடன் மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த பொக்கிஷங்களை விற்பனை செய்வது நெறிமுறையாகக் கருத முடியுமா? என்றும் பல தரப்பினர் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ)

# சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் ரஷ்யாவுக்கு நாளை பயணம்!

மொஸ்கோ, மே 06

சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் நாளை புதன்கிழமை அரச பயணமாக ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார். அங்கு அவர் 3 நாட்கள் தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

இந்தப் பயணத்தின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து இரு தரப்புப் பேச்சில் ஸி ஜின்பிங் ஈடுபடவுள்ளார். மேலும், மொஸ்கோவில் நடைபெறவுள்ள வெற்றிநாள் கொண்டாட்டத்திலும் பங்கேற்கவுள்ளார்.

புடினுடனான பேச்சில் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது, கூட்டாண்மை விரிவாக்கம், இராஜதந்திர ரீதியிலான உத்திதி, சர்வதேச மற்றும் பிராந்திய அளவிலான பிரச்னைகள் குறித்து இதில் விவாதிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி பந்தில் த்ரில் வெற்றி!

# கொல்கத்தாவின் 'பிளே ஓவ்' வாய்ப்பு இன்னும் உயிர்ப்புடன்!



கொல்கத்தா, மே 06

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 53ஆவது போட்டியில் கடைசி பந்தில் த்ரில் வெற்றி பெற்றது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி. இதன் மூலம் பிளே ஓவ் சுற்று வாய்ப்பை இன்னமும் உயிர்ப்போடு வைத்துள்ளது அந்த அணி.


207 ஓட்டங்களை விரட்டிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 205 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ராஜஸ் தான் அணித் தலைவர் ரியான் பராக் 45 பந்துகளில் 95 ஓட்டங்களை விளாசி இருந்தார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத் தில் இந்த ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி துடுப் பெடுத்தாட முடிவு செய்தது. அந்த அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் எடுத்தது. ரஸல், 25 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்தார். ரகுவன்ஷி 44, ரஹானே 30, குர்பாஸ் 35 ஓட்டங்கள் எடுத்தனர்.

207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ராஜஸ்தான் அணி விரட்டியது. ஒரு பக்கம் விக்கெட் விழுந்தாலும் அந்த அணியின் தலைவர் ரியான் பராக் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தார். 45 பந்துக ளில் 95 ஓட்டங்களை அவர் எடுத்தார். 6 பௌண்ட்ரி, 8 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார். இதில் தொடர்ச் சியாக 6 சிக்ஸர்களை அவர் எதிர்கொண்ட அடுத்தடுத்த பந்துகளில் விளாசி இருந்தார். ஜெய்ஸ்வால் 34, ஹெட்மயர் 29, /பம் துபே 25 ஓட்டங்களை எடுத்தனர்.

ராஜஸ்தானின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 22 ஓட்டங் கள் தேவைப்பட்டன. அந்த ஓவரை கொல்கத்தா தரப் பில் வைபவ் அரோரா வீசினார். முதல் 5 பந்துகளில் 19 ஓட்டங்கள் சேர்த்தனர் ஆர்ச்சரும், ஹூபம் துபேவும். கடை சிப் பந்தில் ராஜஸ்தான் வெற்றிக்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட ஓர் ஓட்டம் மட்டுமே எடுக்க முடிந்தது. ராஜஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் 2 ஓட்டங்களை எடுக்க முயற்சித்தனர். இருப்பினும், 2ஆவது ஓட்ட முயற்சியில் ஆர்ச்சர் ரன் அவுட் ஆனார். இந்த வெற்றியின் மூலம் பிளே ஓவ் வாய்ப்பை உயிர்ப்போடு வைத்துள்ளது நடப்பு சம்பியனான கொல்கத்தா.

இந்தப் போட்டியில் கொல்கத்தாவின் வெற்றிக்கு உதவியது டெத் ஓவர்களில் குவித்த ஓட்டங்கள்தான். அந்த அணியின் ரஸல் அதிரடியால் இறுதி ஓவர்களில் 85 ஓட்டங்கள் குவித்தார். ஆனால், ராஜஸ்தான் அணி 50 ஓட்டங்கள் மட்டும்தான் எடுத்தது. இந்தத் தொடரி லிருந்து லீக் சுற்றோடு ஏற்கெனவே ராஜஸ்தான் அணி வெளியேறியது குறிப்பிடத்தக்கது. ஆட்ட நாயகன் விருதை ரஸல் பெற்றார். (ஐ)



## ஒரே ஓவரில் 5 சிக்ஸர் சாதித்தார் ரியான் பராக்

கொல்கத்தா, மே 06

ஒரு ஓவரில் 5 சிக்ஸர்களை விளாசி சாதித்துள்ளார் ராஜஸ்தானின் ரியான் பராக்.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 53ஆவது போட்டி யில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

முதலில் ஆடிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு 207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது. எனி னும், 205 ஓட்டங்களை எடுத்து ஓர் ஓட்டத்தால் அந்த அணி தோல்வியடைந்தது.

இதில், ராஜஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக ரியான் பராக் 95 ஓட்டங்களை குவித்திருந்தார். இவர், மொயின் அலி வீசிய 13ஆவது ஓவரில் 2ஆவது பந்திலிருந்து தொடர்ச்சியாக 5 சிக்ஸர்களை விளாசி அரங்கத்தை அதிரச் செய்தார்.

இதன் மூலம் அவர் சாதனை பட்டியல் ஒன்றிலும் இடம் பிடித்துள்ளார். அதாவது, ஒரே ஓவரில் 5 சிக் ஸர்கள் விளாசிய வீரர்கள் பட்டியலில் ரியான் பராக் இணைந்துள்ளார்.

பட்டியல் விவரம் வருமாறு,

கிறிஸ் கெயில் - பந்துவீச்சாளர் ராகுல் சர்மா, 2012, ராகுல் தெவாட்டியா - பந்துவீச்சாளர் ஷெல்டன் காட்ரெல், 2020, ரவீந்திர ஜடேஜா - பந்துவீச்சாளர் ஹர்ஷல் பட்டேல், 2021, ரிங்கு சிங் - பந்துவீச்சாளர் யாஷ் தயாள், 2023, ரியான் பராக் - பந்துவீச்சாளர் மொயீன் அலி, 2025. (ஐ)

# யாருக்கும் நான் பயப்பட மாட்டேன்!

பும்ரா சொல்கிறார்



மும்பை, மே 06

எந்தவொரு துடுப்பாட்ட வீரருக்கும் பந்துவீசுவதற்கு பயப்படமாட்டேன் என்று மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் ஜஸ்பிரீத் பும்ரா கூறியுள்ளார்.

உலகில் தற்போதுள்ள வேகப்பந்து வீச்சாளர்களில் மிகவும் அபாயகரமான பந்துவீச்சாளராக கருதப்படுப வர் ஜஸ்பிரீத் பும்ரா. இருபது -20 போட்டிகளின் கடைசி ஓவர்களை மிகச்சிறந்த முறையில் பந்துவீசி எந்தவொரு துடுப்பாட்ட வீரரையும் திணறடிக்கும் அசாத்திய திறமை பெற்றவர் பும்ரா.

இந்நிலையில், அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில், ஒவ்வோர் ஆட்டத்தையும் புதிதாக விளையாடுவது போன்றுதான் நான் அணுகுவேன். இதுவரை எந்தவொரு துடுப்பாட்ட வீரரையும் கண்டு பயந்ததில்லை. அவர் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகவோ அல்லது சராசரி யான துடுப்பாட்ட வீரராகவோ இருக்கலாம். உண்மை யில் எந்த வீரரையும் கண்டு பயந்ததில்லை என்பதுதான் உண்மை. கிரிக்கெட் விளையாட்டை நான் மிகவும் மதிக் கிறேன். அதேபோல் விளையாட்டில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரருக்கும் நான் மதிப்பு கொடுக்கிறேன். ஆனால், நான் அவரைப் பார்த்து பயப்படுகிறேன் என்றோ, அவர் என்னை விட சிறந்தவர் என்றோ அந்த துடுப்பாட்ட வீரருக்கு மன உறுதியைக் கொடுத்துவிட்டால், விளை யாட்டில் நான் தோல்வி கண்டுவிட்டேன் என்று அர்த் தம். எனவே, மன உறுதியை விட்டுத்தரமாட்டேன் - என் றார். (ஐ)

## மட்ரிட் ரென்னிஸ் சபலென்கா சம்பியன்!




மட்ரிட், மே 06

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா சம்பியனானார்.

ஸ்பெயினின் மட்ரிட்டில் நடந்த ஒற்றையர் இறுதிப் போட்டியில் அரினா சபலென்காவும், அமெரிக்க வீராங் கனை கோகோ காப்பும் மோதினர். இதில் சபலென்கா 6-3, 7-6 (7-3) என்ற செற் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சபலென்கா 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## லக்னோவை 37 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பஞ்சாப்!

தரம்சாலா, மே 06

லக்னோ அணியை 37 ஓட்டங்களால் வெற்றி கொண் டது பஞ்சாப் கிங்ஸ் அணி.

தரம்சாலாவில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி யின் பிரியன்ஷ் ஆர்யா, ப்ரப்சிம்ரன் சிங் இன்னிங்ஸை தொடங்கினர். பிரியன்ஷ் ஆர்யா ஓர் ஓட்டத்துடன், வெளியேறினார். எதிர்முனையில் ஆடிய ப்ரப்சிம்ரன் 91 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

ஜோஸ் இங்கிலிஷ் 30 ஓட்டங்கள், ஷ்ரேயாஸ் ஐயர் 45, நேஹால் வதேரா 16, ஷஷாங்க் சிங் 33, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 15 என்று ஆட்டமிழந்தனர். 20 ஓவர் முடிவில் பஞ்சாப் அணி 236 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணிக்கு எய்டன் மார்க்ரம், மிற் சல் மார்ஷ் இருவரும் தொடக்கம் கொடுத்தனர். மார்க் ரம் 13 ஓட்டங்கள் எடுத்தார். மிற்சல் மார்ஷ் ஓர் ஓட்டம் கூட எடுக்காமல் வெளியேறினார். நிக்கோலஸ் பூரன் 6 ஓட்டங்கள், ரிஷப் பந்த் 18 ஓட்டங்கள் எடுத்தனர்.

அடுத்து இறங்கிய ஆயுஷ் பதோனி மட்டுமே அதிக பட்சமாக 74 ஓட்டங்கள் எடுத்து அணியின் ஓட்ட எண் ணிக்கையை உயர்த்தினார். டேவிட் மில்லர் 11, அப்துல் சமது 45, ஆவேஷ் கான் 19 என 20 ஓவர்களில் 199 ஓட் டங்கள் எடுத்து தோல்வியை தழுவியது லக்னோ அணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்...

சபைகள் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 77 உள்ளூராட்சி சபைகளுக்கு இன்றைய தினம் தேர்தல் நடைபெற வுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனைவரும்...

வகையில் விடுமுறை வழங்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு விசேட சுற்ற றிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம். ஒருசில தனியார் துறையினர் தமது சேவையாளர்கள் வாக்களிக்க செல்வ தற்கு விடுமுறை வழங்கவில்லை என்று ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆணைக்குழு வின் அறிவுறுத்தலுக்கு அமைய செயல் படுமாறு தனியார் துறை சேவை வழங்கு நர்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 02, 12இல்)

## தமிழ் மக்கள்...

ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் என்.பி.பி முலாம் பூசப்பட்ட ஜே.வி.பி அரசும் அதற்கு விதிவிலக்கல்ல.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது கொண்ட அதிருப்தி தேசிய மக்கள் சக்திக்கு, தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறது என்ற விம்பத்தை அளித்திருக்கிறது. இதனால், சிங்கள - பௌத்த பேரினவாத கட்சி, தாம் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இலங்கையில் இனமுரண்பாடு இல்லை என்றும் சர்வதேச ரீதியில் கூறுகிறது. ஆனால், இவர்கள் ஆட்சிப் பீடம் ஏறி 06 மாதங்கள் கடந்திருக்கின்ற நிலையிலும் தமிழ் மக்களுக்கு வழங்கிய எந்தவொரு தேர்தல் வாக்குறுதிகளும் நிறைவேற்றப் படவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்றவர்கள் இன்று வரை ஒழிக்க வில்லை, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று கூறியவர்கள் இன்றுவரை அதனை நீக்கவில்லை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு களின் வலி, வேதனைகளை அறிவோம் என்றவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் உட்பட பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு எந்தவித நீதியும் வழங்கவில்லை.

இன்றளவும் அரசியல் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்பட வில்லை, நில அபகரிப்பும், சிங்கள - பௌத்தமயமாக்கலும் தமிழர் நிலங் களில் தொடர்ச்சியாக இன்றளவும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் முழு மையாக அகற்றப்படவில்லை. இனப் பிரச்னையை தீர்ப்பதற்காக தமிழ் மக் களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்ட - சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான - தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வை அரசாங்கம் வழங்க தயாரில்லை.

இவ்வாறான காலப்பகுதியில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் இந்த உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் கடந்த பாராளு மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் தாங்கள் விட்ட தவறைத் திருத்திக் கொள்வதற் கான ஓர் அரிய சந்தர்ப்பமே இது.

அதிகாரத்தின் ஆரம்பப் புள்ளியாகிய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகவும் தேசிய இனமாகவும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கி றோம். தென்னிலங்கை தரப்புக்களைப் புறக்கணித்து உங்களுடைய கிராமங்க ளில் உள்ள உங்களுக்கு நம்பிக்கையான, நேர்மையான இறந்தகாலத்தைக் கொண்ட தமிழ்த் தேசியம் சார்ந்தவர் களை உங்களின் பிரதிநிதிகளாக தேர்ந் தெடுக்க வேண்டிய பொறுப்பு இருக்க றது. எம் மண்ணுக்காக உயிர் நீத்தவர் களை நெஞ்சில் நிறுத்தி உங்கள் வாக்கு களை வழங்குங்கள் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமாக கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## அனர்த்தங்களால்...

செயலர் பிரிவின் ஜே/203 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டனர். அத்துடன், வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்தது.

இதேவேளை, கடும் காற்று காரண மாக உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஜே/191 கிராம சேவகர் பிரிவிலும் சண்டி லிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/141, ஜே/150 கிராம சேவகர் பிரிவு களிலும் சங்கானை பிரதேச செயலர் பிரி வின் ஜே/180 கிராம சேவகர் பிரி விலு மாக 7 குடும்பங்களை சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டனர். அத்துடன், 5 வீடுக ளும் பகுதியளவில் பாதிப்புக்கு உள்ளா கின - என்றும் தெரிவித்தார். (ஐ-05)

## காணி...

பிரித்தானிய இராச்சிய காலத்தில் பிரித்தானிய அரசு காணிகளை தமக்கு கீழ் கொண்டுவர கொண்டுவந்த சட்டத்தை பயன்படுத்தி அவசர அவசரமாக இந்த வர்த்தமானி வெளிவந்திருக்கிறது.

எமது நாட்டில் சுமார் 70 வருடங்க ளுக்கு மேலாக இனப்பிரச்னை பூதாகர மாக வளர்த்து விடபட்டு, பின்னர் இப்போராட்டம் அரசினால் பயங்கர வாதமாக கொச்சைபடுத்தபட்டு, பயங் கரவாத தடுப்பு சட்டம் கொண்டுவரப் பட்டது . இருந்தும் இது போன்ற பல்வேறு சட்டமூலங்களை வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரைவாசி நிலப்பரப் பில் இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட் டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் போர் காலத்தில் அன்று அவசரமாக வெளிக் கிட்டு இந்தியாவில் வாழ்ந்து வருகின்ற னர் . இவ்வாறான நிலையில் வடக்கில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங் களில் தனியார் காணிகளை நிரூபிக்க முடியாது வெளியிடப்பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்ட 30 வருட இனவாத ஒடுக்குமுறைக்காக ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த சூழல் உள்ளது. அந்த மக்களின் காணிகளை அரசு சூறையாட முயல்கிறது. வடக்கு மாகாணத்தில் பல இடங்களில் இடப் பெயர்வால் ஆவணங்கள் பல முள்ளி வாய்க்கால் உட்பட பல இடங்களில் காணாமல் போயுள்ளன. 5 இலட்சத்துக் கும் அதிகமான மக்கள் முள்ளிவாய்க்கா லில் அனைத்தையும் இழந்தார்கள். இன்று மக்கள் அந்த ஆவணங்களுக்கு எங்கே போவார்கள். ஆகவே, வர்த்தமா னியின் நோக்கத்தை கேள்விக்கு உட்படுத்துகிறோம்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மேற்கு நாடுகளிலும், இந்தியாவிலும் வாழ்கி றார்கள். அவர்கள் திட்டமிட்டு ஆறுத லாக அங்கு செல்லவில்லை. மாறாக, அவசர அவசரமாக தமது உயிரை பாதுகாக்க சட்டவிரோதமாகவே செல்லவேண்டியிருந்தது . அப்படிபட்ட மக்கள் சொத்துகளையோ ஆவணங் களையோ கொண்டு போகவில்லை. அப்படிபட்ட மக்களின் காணிகளை இந்த வர்த்தமானியின் மூலம் நிரூபிக்க முடியுமா என்ற கேள்வி உள்ளது . இங்கே வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு இடையேயுள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் அது அயலவர்கள் மூலம் பேணப்பட்டது. ஆனால், மூன்று மாத காலத்தில் அதனை நிரூபிக்க முடியாது.

இப்போது வெளியிடப்பட்ட வர்த்த மானியை எமது மக்கள் பல காரணங்க ளால் சட்டரீதியாக அணுகக் கூடியதாக வில் இல்லை. இவ்வாறான வர்த்தமா னியை வெளியிட்டமையை நாம் கண்டிக்கிறோம். இந்த வர்த்தமா னியை உடனடியாக அரசாங்கம் மீளப் பெற வேண்டும். இல்லையேல், வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் இணைந்து அரசாங்கத்தை ஸ்தம்பிக்க செய்வோம் - என்றும் கூறினார். (ஐ)

# ஐ. நா. வெசாக் தின நிகழ்வில் ஜனாதிபதி அநுர இன்று உரை!



கொழும்பு, மே 06

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கின் அழைப்பின் பேரில் வியட் நாமுக்கு சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இன்று செவ்வாய்க் கிழமை ஹோ சி மின் நகரில் ஆரம்பமா கும் 20ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராக பங்கேற்று பிர தான உரையாற்றவுள்ளார்.

இலங்கை நேரப்படி இன்று செவ் வாய்க்கிழமை காலை 7.40 மணியளவில் ஜனாதிபதி இந்த உரையை நிகழ்த்தவுள் ளார். இந்த உரை உள்ளூராட்சி தேர்தலுக்குப் பின்னர் மாலை 5:00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளி பரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"மனித கண்ணியத்துக்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை: உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்" என்ற தொனிப் பொருளில் இன்று ஆரம்ப மாகும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது. அத்துடன், இலங்கை, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய பௌத்த நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் நாடுகள் மற்றும் 85 தேசங்களை சேர்ந்த சுமார் 2,800 பேர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# தேர்தல் கடமைக்காக சென்ற இளம்பெண் அதிகாரி மரணம்

கொழும்பு, மே 06

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கடமைகளுக்காக கண்டி - கண்ணொ ருவ கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள வாக்குச் சாவடிக்கு சென்ற அபிவிருத்தி அதிகாரி ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

கலகெதர மினிகமுவ பகுதியை சேர்ந்த உயிரிழந்தவர் கிருஷாந்தி குமாரி தசநாயக்க (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் திடீர் சுகவீனமடைந்தவர் பேரா தனை தேசிய மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந் தார்.

பிரேத பரிசோதனையின் பின்னரே அவரின் மரணத்துக்கான காரணத்தை உறுதியாகக் கூறமுடியும் என்று மருத் துவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# பல்கலை. மாணவன் மரணம் மேலும் 4 மாணவர்கள் சரண்!

கொழும்பு, மே 06

சப்ரகமுவ பல்கலைக்கழக மாண வனை பகிடிவதைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் மேலும் 4 மாண வர்கள் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த மாணவர்கள் பகிடி வதை காரணமாக தவறாக முடிவெடுத்து மாணவன் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட வுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி களால் சந்தேகத்தின் பேரில் பல்கலைக் கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர் கள் நால்வர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நால்வரும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## 8,257 பேரை...

அளிக்க முடியும். வாக்களிக்க செல்லும போது வாக்காளர் அட்டை கள், தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் பதிவு திணைக்களத்தால் உறுதிப்படுத் தப்பட்ட ஏதாவதோர் ஆவணத்தை கொண்டு செல்ல வேண் டும். வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியும் என்றாலும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியி ருக்கும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்களிக்கும்போது, வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சி களின் சின்னங்களும் சுயேச்சைக் குழுக் களின் பெயர்களுக்கு எதிரே சுயேச்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும். அதற்கு எதிராக வெற்றுக்கட்டம் இருக் கும். அந்த வெற்றுக்கட்டத்தில் தாம் வாக்களிக்க விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு புள்ளடியிட்டு வாக்களித்தல் வேண்டும்.

இந்தத் தேர்தலில் 8 ஆயிரத்து 257 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 75 ஆயிரத்து 589 பேர் போட்டியிடுகின் றனர். அத்துடன், ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் வாக் களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது கடந்த பாராளுமன்றத் தேர்தலையும் விட ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 976ஆல் அதிகமாகும். மக்கள் வாக்களிப் பதற்காக 13 ஆயிரத்து 759 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நடைபெறும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் வட்டார மட்டத்தில் 60 வீத மும் விகிதாசார அடிப்படையில் 40 வீதமுமாக கலப்பு முறைமையில் நடை பெறுகிறது. இந்தத் தேர்தல் முறைமை கடந்த 2018ஆம் ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்டது.

தற்போது நடைபெறும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், கோவிட் பெருந்தொற்று, பொரு ளாதார நெருக்கடி, நிதிப் பற்றாக் குறை போன்ற பல்வேறு காரணங்களால் பிற் போடப்பட்டிருந்தது என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

அத்துடன், தீவக மக்கள் வாக்களிக்க வசதியாக அந்தப் பிரதேசங்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மாத்தறை சிறையில் சோதனை

கொழும்பு, மே. 06

மாத்தறை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 14 கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மாத்தறை சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கையில், 14 கையடக்கத் தொலைபேசிகள், 05 கைவிலங்குகள் மற்றும் 04 கைவிலங்கு சாவிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேர்தல் வன்முறைகள் இம்முறை மிகக்குறைவு

### தேர்தல் ஆய்வுகள் நிறுவனம்



கொழும்பு, மே. 06

**தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் கடந்த கால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை மிகவும் குறைவாக வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலுக்காக அரச சொத்துகளை பயன்படுத்தியதாக எமக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

நாளைய தினம் (இன்று) முக்கியமான தேர்தல் நடைபெறுகிறது. ஆதலால் அனைவரும் தமது வாக்குரிமையை பயன்படுத்துமாறு நாம் கோருகிறோம்.

அனைத்து தனியார் துறை ஊழியர்களுக்கும் வாக்களிப் பதற்காக விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. தேர்தல் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் தகவல்களை நாம் கண்காணித்து வருகிறோம். நூற்றுக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடர்பில் நாம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளோம். சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கான முழு அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு உண்டு - என்றார். (அ)

## வெளிநாடுகளிலிருந்து குற்றச் செயல்களைப் புரிய தூண்டுவோரை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

கொழும்பு, மே. 06

வெளிநாடுகளில் தங்கியிருந்து குற்றச் செயல்களை வழிநடத்தும் 20 இற்கும் மேற்பட்ட தேடப்படும் குற்றவாளிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

'லொக்கு பெட்டி' என்றழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா நாட்டுக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து நடைபெற்ற தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில், குற்றங்களை செய்துவிட்டு வெளிநாடுகளில் இருந்து கொண்டு குற்றச் செயல்களை திட்டமிடும் குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, டுபாய், இந்தியா, கனடா ஆகிய நாடுகளில் இவ்வாறு தங்கியுள்ள குற்றவாளிகள் 20 இற்கும் அதிகமானோரை எதிர்காலத்தில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன-என்றார். (அ)



## உள்ளூராட்சி தேர்தலுக்கான ஏற்பாடுகள் உரிய முறையில்!

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே. 06

நாடு முழுவதும் இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நாளைய தினம் நடைபெறவுள்ளது.

அதற்கமைய 49 அரசியல் கட்சிகளும் 257 சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இதேவேளை, 75 ஆயிரத்து 589 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.ஒரு கோடியே 71 இலட்சத்து 56 ஆயிரத்து 338 வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், 13 ஆயிரத்து 759 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இதேவேளை, அனைத்து சபைகளுக்கும் எண்ணாயிரத்து 287 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையிலேயே அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அங்கு மூன்று இலட்சத்து 94 ஆயிரத்து 533 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஆகக் குறைந்த வாக்காளர் எண்ணிக்கையாக மூவாயிரத்து 501 பேர் ஹப்புத்தளை மாநகர சபையில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் மாத்திரமே விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. மூன்று நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக பகிரப்படும் தகவல்கள் பொய்யானவை-என்றார். (அ)

# கடமைகளுக்கு இடையூறு பயணிக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே. 06

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த பயணி ஒருவரை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாத்தறை, துடாவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குறித்த பயணி நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தடைந்தார்.

அவர் தனது பயணப் பையில் சட்டவிரோதமாக வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுகளையும், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான விஸ்கி போத்தல்களையும் மறைத்து வைத்திருந்துள்ளார். சுங்க அதிகாரிகள் தமது கடமைகளை தொடங்கியபோது, கைப்பற்றப்பட்ட பொருட்களை தரையில் வீசி எறிந்து சுங்க அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இது குறித்து சுங்க அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, பயணி கைது செய்யப்பட்டார்.

குற்றவியல் சட்டத்தின் பிரிவு 344 இன் கீழ் கடமையை நிறைவேற்றுவதற்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் அவர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் இதன்போது மேலும் பயணியை அடுத்த வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

## 44 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இளைஞர் கைது

கொழும்பு, மே. 06

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 44 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பஹ்ரைன் நாட்டிலிருந்து இன்றைய தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து 25,400 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 127 சிகரட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் இந்த வெளிநாட்டு சிகரட்டுகளை துபாயில் கொள்வனவு செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக விமான நிலைய சுங்க அதிகாரிகளால் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## மகேஷ் கம்மன்பில பிணையில் விடுதலை

கொழும்பு, மே. 06

தரமற்ற உரத்தை இறக்குமதி செய்ததற்காக, கைது செய்யப்பட்ட விவசாய இராஜாங்க அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் மகேஷ் கம்மம்பில, தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான 5 சரீர பிணைகளில் கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலியால் விடுதலை செய்யப்பட்டார்.

சீனாவின் கிங்டாவோ சீவின் பயோடெக் குரூப் கோ லிமிடெட் நிறுவனத்தால் இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்ட கரிம உரக் கப்பலில் நோய்க்கிருமி பக்டீரியாக்கள் இருப்பது தெரிந்திருந்தும், சுற்றுச்சூழல் அறிக்கைகள் பெறுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் கடன் கடிதங்களை வழங்கியதற்காக மகேஷ் கம்மம்பில கைது செய்யப்பட்டார்.

இதனால் அரசாங்கத்திற்கு 13 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org